

"இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல்" புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வகோட்டை ஊராட்சியில் மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, வீடுகள் தோறும் கழக அரசின் சாதனைகள்அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் எம் பரமசிவம், மா.தமிழ் ஐயா, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ராஜா, ஒன்றிய கவுன்சிலர் நியூஸ் ராஜேந்திரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கலையரசன், கந்தர்வகோட்டை ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஜானகிராமன் உள்ளிட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



கரூர் மாநகர தி.மு.க. சார்பில், "எல்லோருக்கும் எல்லாம்" திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் கரூர் 80 அடி சாலையில் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி நடைபெற்றது. தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார்.

### மயிலாடுதுறை - நாகை - திருவாரூர் மாவட்டங்களின்

# 12,653 பயனாளிகளுக்கு ரூ.143.46 கோடி நல உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்புரை!

மயிலாடுதுறை மார்ச் 5.

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் மற்றும் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களின் முடிவுற்ற பணிகள் திறந்து வைத்தும், புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நட்டியும் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழா நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ரூ. 114.48 கோடி மதிப்பில் கட்டப்பட்ட புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் மயிலாடுதுறை மாவட்டத்தில் 34 பணிகளுக்கு ரூ.150.42 கோடியும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 5 பணிகள் ரூ.259.31 கோடியும் திருவாரூர் மாவட்டத்தில் 32 பணிகள் ரூ 13.63. கோடி என 71 பணிகளுக்கு ரூ 423.36 மதிப்பிலான புதிய கட்டிடங்களை திறந்து வைத்தும் மயிலாடுதுறை மாவட்டத்தில் 37 பணிகளுக்கு ரூ.80.72 மதிப்பிலும்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 3 பணிகளுக்கு ரூ. 7.90 கோடி என 40 பணிகளை ரூ88.62 கோடி மதிப்பிலான கட்டிடங்களை திறந்து வைத்தும், அவர் பேசினார்.

மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த, 8,632 பயனாளிகளுக்கு ரூ.128.49 கோடியும் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 2,660 பயனாளிகளுக்கு ரூ 9.34 கோடியும், திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 1,961 பயனாளிகளுக்கு ரூ.5.63 கோடி என மொத்தம் 12,653 பயனாளிகளுக்கு ரூ143.46 கோடி மதிப்பிலான நல உதவிகள் என மொத்தம் ரூ 655.44 கோடி மதிப்பில் கட்டப்பட்ட கட்டிடங்களை திறந்து வைத்தும், புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டியும் 12, 653 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோட்டில்

# அ.தி.மு.க. உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்

நாமக்கல், மார்ச் 5 -

நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு வேலூர் சாலையில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அ.தி.மு.க. உள்ளிட்ட மாற்று கட்சியில் இருந்து தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் வட்டூர் தங்கவேல் தலைமை வகித்தார். ஆதிதிராவிடர் நலக்குழு ராஜவேலு ஏற்பாட்டில் வட்டூர் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி, நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மண்டல நகர மைப்பு திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். தி.மு.க.வில் இணைய வந்த இளைஞர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்றார். இதனை தொடர்ந்து எஸ்.எம்.மதுரா செந்தில் பேசும் போது, ஒரு கோடி தொண்டர்களைக் கொண்ட இயக்கத்தில் இணைந்து உள்ளீர்கள். இனி உங்களுக்கு தி.மு.க. பக்கபலமாக இருக்கும். தற்போது அ.தி.மு.க. ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்தது போல் இல்லாமல், தற்போது ஜாதி கட்சியாக மாறி உள்ளது. அதனால் கட்சியில் இருந்து ஏராளமான பிரிந்து தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டு வருகின்றனர். மறைந்த முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு பணிகளை வழங்கி உள்ளார். தற்போது தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் அவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏராளமான நலத்திட்ட உதவிகளையும் செய்து, அரசு பணிகளில் வேலைகளையும் வழங்கி வருகிறார் எனக் கூறினார். இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. ஒன்றிய செயலாளர் வட்டூர் தங்கவேல், மாநில வலைதள பொறுப்பாளரும் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினருமான ரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


